திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு.பெ.இரவிச்சந்திரன், எம்.எஸ்ஸி.,எம்.ஏ.,பி.எட்.,

ந.க.எண். 4551/அ1/2019 நாள்: 25.10.2024

30.10.24

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவள்ளூர் மாவட்டம் - கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு - திருவள்ளூர் மாவட்டம் – பொன்னேரி கல்வி மாவட்டம், பொன்னேரி, மாவட்டக் கல்வி அலுவலகத்தில் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராக பணிபுரிந்து 23.02.2014ல் மரணமடைந்த காலஞ்சென்ற திரு.ஜி.நந்தன் என்பவரின் வாரிசுதாரரான திரு.ந.கார்த்திக் - இளநிலை உதவியாளர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பொன்னேரி என்பவருக்கு அரசின் அறிவுரையின்படி இளநிலை உதவியாளர் பதவியில் 01.08.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து

பார்வை:
1. திருவள்ளூர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 4551/அ1/2019, நாள். 31.07.2023.
2. அரசாணை(நிலை) எண்.80/பள்ளிக்கல்வித் துறை நாள்.02.03.2016
3. அரசாணை(நிலை) எண்.101/பள்ளிக்கல்வித் துறை நாள்.18.05.2018
4.அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021
5.அரசாணை எண்.151, ப.க.SE1(1), துறை, நாள்.09.09.2022
6.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண். 0891/ஜே/இ4/2024 நாள். 13.08.2024.
7. அரசுக் கடித (efile) எண் 4419/தொ.க 1(1) /2024–1, நாள் 17.05.2024.
8. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண். 26062/ஜெ/இ4/2023 நாள் 22.05.2024.

-------

பொன்னேரி கல்வி மாவட்டம், பொன்னேரி, மாவட்டக் கல்வி அலுவலகத்தில் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராக பணிபுரிந்து 23.02.2014ல் மரணமடைந்த காலஞ்சென்ற திரு.ஜி.நந்தன் என்பவரின் வாரிசுதாரரான திரு.ந.கார்த்திக், என்பவருக்கு பார்வை 1–இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் பொன்னேரி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, இளநிலை உதவியாளராக 01.08.2023 முற்பகல் முதல் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 7ல் காணும் அரசுக் கடிதத்தின்படி, இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு நியமன அலுவலர் நிலையில் கருத்துருவினை பரிசீலித்து பணிவரன்முறை செய்திட பார்வை 8ல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பார்வை 6ன்படி பெறப்பட்ட தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்கு கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் ஆய்வு செய்யப்பட்டது. அக்கருத்துருவில் தனியர் சார்பாக விலக்கு / தளர்வாணை ஏதும் தேவைப்படாத நிலையில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பதவிக்குரிய நியமன அலுவலரான முதன்மைக்

கல்வி அலுவலர் பணிவரன்முறை செய்ய தெரிவித்துள்ளதன் அடிப்படையில் 01.08.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பெயர்/பதவி/பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.ந.கார்த்திக்<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு ஆண்கள்<br>மேல்நிலைப் பள்ளி,<br>பொன்னேரி,<br>திருவள்ளூர் மாவட்டம். | 01.08.2023 முற்பகல் | 01.08.2023 முற்பகல் |

நிபந்தனைகள்:

1. மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும்.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016பிரிவு 31(4)ல் தெரிவித்துள்ளவாறு தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும்
3. தகுதிகாண்பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடித்திருக்க வேண்டும்.
4. தகுதிகாண் பருவம் முடிக்கபட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பி வைக்குமாறு சார்ந்த அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: பணிப்பதிவேடு மற்றும் அசல் சான்றுகள்

முதன்மைக் கல்வி அலுவலர்
திருவள்ளூர்

பெறுநர் - சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த அலுவலர் வழியாக)

நகல் – 1. சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்

2. சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்

3. பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி), சென்னை.6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது

4. கோப்புக்கு